# தூய ஆரோக்கிய அன்னை திருவிழா



**05 DAY**

# தூய ஆரோக்கிய அன்னை மீட்பின் ஊற்று...

# தூய ஆரோக்கிய அன்னை மீட்பின் ஊற்று



எசே. 47:7-12

நான் அங்கே சென்றபோது ஆற்றின் இரு கரைகளிலும் எண்ணற்ற மரங்கள் நிற்கக் கண்டேன்....இத்தண்ணீர் கிழக்குப் பகுதியை நோக்கிப் பாய்ந்து ... அத்தண்ணீர் அங்கு நல்ல தண்ணீராக மாறும்...இந்த ஆறு பாயுமிடமெல்லாம் திராளான உயிரினங்கள் வாழும். பலவகையான பழமரங்கள் ஆற்றின் இருமருங்கிலும் வளரும்: அவற்றின் இலைகள் உதிரா: அவற்றில் கனிகள் குறையா. ஒவ்வொரு மாதமும் அவை கனி கொடுக்கும்: ஏனெனில் தூயத்திலிருந்து தண்ணீர் அவற்றிற்குப் பாய்கின்றது. அவற்றின் கனிகள்

## அன்பில் இணைவோம்

குரு: ஆண்டவருடைய மீட்பை அறிவியுங்கள்
அவருடைய அரும்பெரும்செயல்களை எடுத்தியம்புங்கள்

Priest : Announce the salvation of the Lord
Proclaim his works among the people

மக் என்றென்றும் உள்ளது அவரது இரக்கம்

People: His mercy is everlasting

குரு: இறைவார்த்தையால் இவ்வுலகை ஒளிர்வித்த
இறைவனை நாம் வாழ்த்துவோம்.

Priest : Bless the Lord our God
Who sent the Word of life into the World

மக் ஆண்டவர் தம் செயல்களில் நீதியுள்ளவர்
அவருடைய செயல்கள் புனிதமானவை
அனைத்துலகே ஆண்டவரைப் புகழ்வாயாக
உயிருள்ள அனைத்தும் அவரின் திருநாமத்தை வாழ்த்துவதாக

People: Just is the Lord in all His ways
And Holy in all His works
Let every creature praise Him
and all living beings bless his name

## புகழ்வோம் நம் அன்னையை

ஒருநாளும் உன்னை மறவேன் - தாயே
ஒருநாளும் உன்னை மறவேன்
திருநாளோ இல்லை எந்த—2
வெறும் நாளோ ஒருநாளோ

கடல் நிரில் மிதந்தாலும்
ககனத்தில் பறந்தாலும் - 2
உலகெல்லாம் அறிந்தாலும்
உத்தமனாய் சிறந்தாலும் - ஒரு

நினைத்தவைகள் நடந்தாலும்
நிலைகுலைந்தே மடிந்தாலும்
எனைப் பிறர்தான் இகழ்ந்தாலும்-2
இனிதாகப் புகழ்நதாலும்

## திருப்பாடலில் செபிப்போம் .திபா. 27:1—14

1ஆண்டவரே என் ஒளி: அவரே என் மீட்பு:
யாருக்கு நான் அஞ்சவேண்டும்?
ஆண்டவரே என் உயிருக்கு அடைக்கலம்:
யாருக்கு நான் அஞ்சி நடுங்க வேண்டும்?

2தீயவர் என் உடலை விழுங்க என்னை நெருங்குகையில்,
என் பகைவரும் எதிரிகளுமான அவர்களே இடறி விழுந்தார்கள்.
3எனக்கெதிராக ஒரு படையே பாளையமிறங்கினும்
என் உள்ளம் அஞ்சாது: எனக்கெதிராகப் போர் எழுந்தாலும்
நான் நம்பிக்கையோடிருப்பேன்.

4நான் ஆண்டவரிடம் ஒரு விண்ணப்பம் செய்தேன்:
அதையே நான் நாடித் தேடுவேன்:
ஆண்டவரின் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம்
நான் குடியிருக்க வேண்டும்,
ஆண்டவரின் அழகை நான் காண வேண்டும்:
அவரது கோவிலில் அவரது திருவுளத்தைக் கண்டறிய வேண்டும்.

5ஏனெனில், கேடுவரும் நாளில் அவர் என்னைத்
தம் கூடாரத்தில் மறைத்து வைப்பார்:
தம் கூடாரத்தினுள்ளே என்னை ஒளித்து வைப்பார்.
குன்றின்மேல் என்னை பாதுகாப்பாய் வைப்பார்.

6அப்பொழுது, என்னைச் சுற்றிலுமுள்ள
என் எதிரிகளுக்கு எதிரில் நான் தலைநிமிரச் செய்வார்:
அவரது கூடாரத்தில் ஆர்ப்பரிப்புடன் பலிகளைச் செலுத்துவேன்:

ஆண்டவரைப் புகழ்ந்து பாடல் பாடுவேன்.

7ஆண்டவரே, நான் மன்றாடும் போது
என் குரலைக் கேட்டருளும்
என் மீது இரக்கங்கொண்டு எனக்குப் பதிலளித்தருளும்.
8புறப்படு, அவரது முகத்தை நாடு என்றது என் உள்ளம்;
ஆண்டவரே, உமது முகத்தையே நாடுவேன்.

9உமது முகத்தை எனக்கு மறைக்காதிரும்;
நீர் சினங்கொண்டு அடியேனை விலக்கிவிடாதிரும்;
நீரே எனக்குத் துணை; என் மீட்பராகிய கடவுளே,
என்னைத் தள்ளிவிடாதேயும்; என்னைக் கைவிடாதிரும்.

10தந்தையும் தாயும் என்னைக் கைவிட்டாலும்
ஆண்டவர் என்னை ஏற்றுக்கொள்வார்.

11ஆண்டவரே, உமது வழியை எனக்குக் கற்பித்தருளும்;
என் எதிரிகளை முன்னிட்டு, என்னைச் செம்மையான பாதையில் நடத்தும்.
12பகைவரின் விருப்பத்திற்கு என்னைக் கைவிடாதிரும்
ஏனெனில், பொய்ச்சாட்சிகளும் வன்முறையை மூச்சாகக் கொண்டவர்களும்
எனக்கெதிராய்க் கிளம்பியுள்ளனர்.

13வாழ்வோரின் நாட்டினிலே ஆண்டவரின்
நலன்களைக் காண்பேன் என்று நான் இன்னும் நம்புகிறேன்.
14நெஞ்சே! ஆண்டவருக்காகக் காத்திரு; மன உறுதிகொள்;
உன் உள்ளம் வலிமை பெறட்டும்; ஆண்டவருக்காகக் காத்திரு.

## Psalm - 27:1-14

1The LORD is my light and my salvation;
whom shall I fear?
The LORD is the stronghold[a] of my life;
of whom shall I be afraid?
2 When evildoers assail me
to devour my flesh—
my adversaries and foes—
they shall stumble and fall.
3 Though an army encamp against me,
my heart shall not fear;
though war rise up against me,
yet I will be confident.
4 One thing I asked of the LORD,
that will I seek after:
to live in the house of the LORD

all the days of my life,
to behold the beauty of the LORD,
and to inquire in his temple.
5 For he will hide me in his shelter
in the day of trouble;
he will conceal me under the cover of his tent;
he will set me high on a rock.
6 Now my head is lifted up
above my enemies all around me,
and I will offer in his tent
sacrifices with shouts of joy;
I will sing and make melody to the LORD.
7 Hear, O LORD, when I cry aloud,
be gracious to me and answer me!
8 “Come,” my heart says, “seek his face!”
Your face, LORD, do I seek.
9 Do not hide your face from me.
Do not turn your servant away in anger,
you who have been my help.
Do not cast me off, do not forsake me,
O God of my salvation!
10 If my father and mother forsake me,
the LORD will take me up.
11 Teach me your way, O LORD,
and lead me on a level path
because of my enemies.
12 Do not give me up to the will of my adversaries,
for false witnesses have risen against me,
and they are breathing out violence.
13 I believe that I shall see the goodness of the LORD
in the land of the living.
14 Wait for the LORD;
be strong, and let your heart take courage;
wait for the LORD!

## செவிமடுப்போம் இறைவார்த்தைக்கு

**புனித யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்: யோவா. 19:25—37**

25 சிலுவை அருகில் இயேசுவின் தாயும், தாயின் சகோதரியும் குளோப்பாவின்
மனைவியுமான மரியாவும், மகதலா மரியாவும் நின்று கொண்டிருந்தனர். 
26 இயேசு தம் தாயையும்
அருகில் நின்ற தம் அன்புச் சீடரையும் கண்டு தம் தாயிடம், அம்மா, இவரே உம் மகன்

என்றார். 27பின்னர் தம் சீடரிடம், ‘இவரே உம் தாய்’ என்றார். அந்நேர முதல் அச்சீடர் அவரைத்
தம் வீட்டில் ஏற்று ஆதரவ அளித்து வந்தார்.

28இதன்பின், அனைத்தும் நிறைவேறிவிட்டது என்பதை அறிந்த இயேசு, ‘தாகமாய்
இருக்கிறது’ என்றார். மறைநூலில் எழுதியுள்ளது நிறைவேறவே இவ்வாறு சொன்னார். 29அங்கே
ஒரு பாத்திரம் நிறையப்புளித்த திராட்சை இரசம் இருந்தது. அதில் கடற்பஞ்சை நன்கு தோய்த்து
ஈசோப்புத் தண்டில் பொருத்தி அதை அவர்கள் அவரது வாயில் வைத்தார்கள். 30அந்த இரசத்தைக்
குடித்ததும் இயேசு, ‘எல்லாம் நிறைவேறிற்று’ என்று கூறித் தலை சாய்த்து ஆவியை
ஒப்படைத்தார்.

31அன்று பாஸ்கா விழாவுக்கு ஏற்பாடு செய்யும் நாள். அடுத்த நாள் ஓய்வு நாளாகவும்
பெருநாளாகவும் இருந்தது. எனவே அன்று சிலுவையில் உடல்கள் தொங்கலாகா என்பதற்காகக்
கால்களை முறித்துச் சடலங்களை எடுத்துவிடுமாறு யூ தர்கள் பிலாத்திடம் கேட்டுக்கொண்டார்கள்.
32ஆகவே படைவீரர் வந்து இயேசுவோடு சிலுவையில் அறையப் பட்டிருந்தவருள் ஒருவனுடைய
கால்களை முதலில் முறித்தார்கள்; பின்னர் மற்றவனுடைய கால்களையும் முறித்தார்கள்.

33பின்பு அவர்கள் இயேசுவிடம் வந்தார்கள். அவர் ஏற்கெனவே இறந்து போயிருந்ததைக்
கண்டு அவருடைய கால்களை முறிக்கவில்லை. 34ஆனால் படைவீரருள் ஒருவர் இயேசுவின்
விலாவை ஈட்டியால் குத்தினார். உடனே இரத்தமும் தண்ணீரும் வடிந்தன. 35இதை நேரில்
கண்டவரே இதற்குச் சாட்சி. அவரது சான்று உண்மையானதே. அவர் உண்மையையே கூறுகிறார்
என்பது அவருக்குத் தெரியும். நீங்களும் நம்ப வேண்டும் என்பதற்காகவே அவர் இதைக்
கூறுகிறார். 36எந்த எலும்பும் முறிபடாது’ என்னும் மறைநூல் வாக்கு இவ்வாறு நிறைவேறியது.
37மெலும் ‘தாங்கள் ஊடுருவக் குத்தியவரை உற்றுநொக்குவார்கள்’ என்றும் மறைநூல் கூறுகிறது.

**இது கிறிஸ்துவின் வாழ்வு தரும் நற்செய்தி**
**கிறிஸ்துவே உமக்குப் புகழ்..**

Jn:19:25-37

25 Near the cross of Jesus stood his mother, his mother’s sister, Mary the wife of
Clopas, and Mary Magdalene. 26 When Jesus saw his mother there, and the disciple
whom he loved standing nearby, he said to her, “Woman,[a] here is your son,” 27 and
to the disciple, “Here is your mother.” From that time on, this disciple took her into
his home. 28 Later, knowing that everything had now been finished, and so that
Scripture would be fulfilled, Jesus said, “I am thirsty.” 29 A jar of wine vinegar was
there, so they soaked a sponge in it, put the sponge on a stalk of the hyssop plant,
and lifted it to Jesus’ lips. 30 When he had received the drink, Jesus said, “It is fin-
ished.” With that, he bowed his head and gave up his spirit. 31 Now it was the day of
Preparation, and the next day was to be a special Sabbath. Because the Jewish lead-
ers did not want the bodies left on the crosses during the Sabbath, they asked Pilate
to have the legs broken and the bodies taken down. 32 The soldiers therefore came
and broke the legs of the first man who had been crucified with Jesus, and then
those of the other. 33 But when they came to Jesus and found that he was already
dead, they did not break his legs. 34 Instead, one of the soldiers pierced Jesus’ side
with a spear, bringing a sudden flow of blood and water. 35 The man who saw it has
given testimony, and his testimony is true. He knows that he tells the truth, and he
testifies so that you also may believe. 36 These things happened so that the scripture
would be fulfilled: “Not one of his bones will be broken,”[b] 37 and, as another scrip-
ture says, “They will look on the one they have pierced.”[c]

**இறை வார்த்தையை உள்ளத்தில் இருத்தி சிந்திப்போம்...**

## நம் உள்ளத்தில் எழும் மன்றாட்டுக்களை நம் ஆரோக்கிய அன்னை வழியில் அன்பர் இயேசுவிடம் சமர்ப்பிப்போம்.

1. அன்னையாம் திருச்சபைக்காக மன்றாடுவோம்: தாய் திருச்சபையை வழிநடத்தும் நமது திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள் குருக்கள் மற்றும் இறைமக்கள் நமது அன்னை மரியாவைப் போல ஆவியின் வரங்களால் நிரப்பட்டு ஒற்றுமையின் கருவிகளாகத் திகழ்ந்திட ஆண்டவரே அன்னை மரியா வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

**இறைவா! புனித ஆரோக்கிய அன்னை வழியாக நாங்கள் கேட்கும் மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும்.**

2. நமது தளத்திருச்சபைக்காக மன்றாடுவோம்.: நமது தலைமை ஆயர் மற்றும் இனையாயர்கள் நமது உயர் மறைமாவட்டதில் உள்ளஒவ்வொரு குடும்பங்களிலும் இறைவார்த்தையின் ஒளி மகிழ்சியிலும் மனநிறைவிலும் ஒற்றுமையிலும் வாழ்ந்திட வளர்ந்திட ஆண்டவரே அன்னயைாம் மரியாள் வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

**இறைவா! புனித ஆரோக்கிய அன்னை வழியாக நாங்கள் கேட்கும் மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும்.**

3. அமெரிக்கா வாழ் இந்தியர்களுக்காக அவர்களின் குடும்பங்களுக்காக மன்றாடுவோம். அன்பிலும் மகிழ்ச்சியிலும் ஒன்றுபட்டு வாழ்ந்திடவும் ஒரு-வரையொருவர் மன்னித்து ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தை தந்திட ஆண்டவரே அன்னை மரியாவழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

**இறைவா! புனித ஆரோக்கிய அன்னை வழியாக நாங்கள் கேட்கும் மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும்.**

4. புனித ஆரோக்கிய அன்னையின் பத்தர்கள் அனைவருக்காகவும் மன்றாடுவோம்: அன்னையைப்போல பிறரன்பிலும் இறையன்பிலும் நாளுக்கு நாள் வாழ்ந்து நற்செய்திக்குச் சான்றுபகர்ந்திட அருள்வேண்டி ஆண்டவரே அன்னை மரியா வழியாக ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

**இறைவா! புனித ஆரோக்கிய அன்னை வழியாக நாங்கள் கேட்கும் மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும்.**

5. நமது தனிப்பட்ட தேவைகளுக்காக ….

…..ஆண்டவரே அன்னை மரியா வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

**இறைவா! புனித ஆரோக்கிய அன்னை வழியாக நாங்கள் கேட்கும் மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும்.**

# புனித ஆரோக்கிய அன்னை நவநாள் செபம்

மகா பரிசுத்த கன்னிகையே! இயேசுவின் தாயாராயிருக்குமாறு
பரிசுத்த மூவொரு கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்ட தூய கன்னி மரியே!
கடவுளுடைய திருப்புதல்வர் உமது திருஉதரத்தில்
மனிதராக அவதரித்தபோதும் ஒன்பது மாதமளவாக
அவரை உமது மாசணுகாத கருவில் தாங்கியபோதும்
நீர் அடைந்த பேரின்பத்தை உமது ஊழியர்களாகிய நாங்கள்
நினைவுகூர அருள்கூர்ந்தமைக்கு உமக்கு நன்றிகூருகின்றோம்.
எமது அன்பினாலும் தூய வாழ்வினாலும்
நீர் அடைந்த பேரின்பத்தை நாங்களும் அடைய
எங்களுக்காக மன்றாடும் தாயே!
துன்பப்படுவோரின் தாயே இரக்கமிக்க அன்னையே!
நீர் அனுபவித்த பேரின்பத்தைக் கொண்டாடுகின்றவர்களுக்கு
நீர் வாக்களித்துள்ள விசேச உதவியையும் பாதுகாப்பையும்
எங்களுக்கு இவ்வேளையில் பெற்றுத்தந்தருளும்.
கேளுங்கள் கொடுக்கப்படும் என்ற உம் திருமகன் இயேசுகிறிஸ்துவின்
வல்லமைமிக்க வார்த்தையில் நம்பிக்கைகொண்டு
உமது வல்லமைமிக்க மன்றாட்டுகளில் நம்பிக்கைகொண்டு
இந்த நவநாட்களில் நாங்கள் செய்யும் விண்ணப்பங்களை
கடவுளுடைய திருவுளத்திற்கு மாறாயிருந்த
ால்
எமக்கு எவ்வரம் மிகவும் தேவையோ அவற்றை பெற்றுத்தந்தருளும்.

(இங்கு மன்றாட்டுக்களை நினைவிற்கொள்ளவும்)

இறைவனின் தாயே! இப்பொழுது உமக்கு வணக்கமாக
நாங்கள் செய்யும் இந்த நவநாளை உம்மில்கொண்டிருக்கும்
ஆழ்ந்த நம்பிக்கையின்பொருட்டு செய்கிறோம்.
இயேசு மனிதராக அவதரித்தபோது
உமது திருவுளம் அடைந்த தெய்வீக மகிழ்ச்சியை
அதற்கு வணக்கமாக நாங்கள் செய்யும் இந்நவநாள் பக்தி முயற்சியையும்
இப்பொழுது நாங்கள் சொல்லப்போகும்
அருள் நிறைந்த செபத்தையும் அன்போடு ஏற்றுக்கொள்ளும் தாயே!

(9 முறை அருள் நிறைந்த செபம்)

நீர் அணிந்திருக்கும் மணிமுடியில்
எம் செபங்கள் அத்தனையும் விண்மீன்களென துலங்குமென
ஆழ்ந்த நம்பிக்கைகொள்கின்றென்.
வருந்துவோருக்கு ஆறுதலே!
எம் வேளைநகர் ஆரோக்கியத் தாயே!
நாங்கள் உம்மிடம் மன்றாடும் விண்ணப்பங்கள் நிறைவேறுமாறு
உமக்கு வணக்கமாக இதுவரை புனிதர்களால் செய்யப்பட்ட
எல்லா அரும்பெரும் நிகழ்வுகளையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.
உமது திருமகனும் எங்கள் ஆண்டவருமான

இயேசு கிறிஸ்துவின் திருஇருதயத்தில் பொங்கி வழியும் பேரன்பையும்
அதுபோன்ற உமது அன்பையும் நினைவிற்கொண்டு
உமது அடியோர்களாகிய எங்களது செபத்தை ஏற்று
எம் மன்றாட்டுகளை அடைந்து தந்தருளும் அம்மா. ஆமென்.

## ஆண்டவரில் அக்களிக்கும் நம் ஆரோக்கிய அன்னையை வாழ்த்துவோம்.

ஆரோக்கிய மாதாவே —உமது
புகழ்பாடித் துதித்திடுவோம்
எந்நாளும் பாடித்துதித்திடுவோம்.

அலைகள்மோதிடும் கடற்கரைதன்னில்
வசித்திட ஆசை வைத்தாயே
புலவகை கலைகளும் பாரினில் துலங்கிட
அனைவருக்கும் துணைபுரிந்தாயே - 2

தேன் கமழும் சோலை சூழ்ந்து விளங்கும்
வேளாங்கண்ணியில் அமர்ந்தாயே
வானகமும் இந்த வையகமும்
செழித்தோங்கிட அருள் புரிந்தாயே

## செபிப்போமாக

என்றும் வாழும் எல்லாம் வல்ல நித்திய இறைவா!
தூய கன்னிமரியாளின் நினைவுநாளைக் கொண்டாடி
உமது திருப்பெயரின் மகிமையை பறைசாற்ற
வரமருளியதற்காக உமக்கு நன்றிநவில்கின்றோம்.
உம் திருமகன் மனிதனான மறையுண்மையால்
தூய ஆவி கன்னிமரியா மீது நிழலிட்டதால்,
எல்லோரும் தங்கள் தாகத்தைத் தணித்துக்கொள்ளும்
நீரூற்றாகிய கிறிஸ்துவை இவ்வுலகிற்கு கொண்டுவந்தார்.
கிறிஸ்துவின் விலாவிலிருந்து வந்த தண்ணீரால்
திருச்சபையும் புதுப்பிறப்படைந்துள்ளது
இவை வாழ்வளிக்கும் நீரூற்றாக இருப்பதால் விசுவாசத்தினால்
இவற்றைப் பருகும் அனைவரும் தூய ஆவியால் நிரப்பப்பட்டு
மீட்பராகிய கிறிஸ்துவைக் கண்டடையப் வரமருள
எங்கள் ஆரோக்கிய அன்னை வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

